மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் சிறிது நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தனியார் நிறுவனங்களுக்கு பலவிதமான அடிப்படையில் மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மகளிர் நலம், சமூக நலம், மகளிர் கல்வியில் பொறுப்புடையவர்கள் போன்ற அந்த நிறுவனங்களும், மற்றும் சில பொது நிறுவனங்களும், சமூக நலத்துறையின் கீழ் உள்ள திட்டங்களின் மூலமாக சில திட்டங்களை மேற்கொள்ளும் தகுதி உடையவர்களாவார்கள். அத்தோடு மட்டும் அல்லாமல் விடுதிகளைக் கட்டுவதற்காக—தனியார் நிறுவனங்கள் கட்டுவதற்காக—75 விழுக்காடு மைய அரசும் மானியம் கொடுக்கிறது. மைய அரசின் மானியத்தை முழுவதுமாக பெற்றதற்குப் பிறகுதான் மாநில அரசு உதவி தருகிறது. மாநில அரசு 15 விழுக்காடு அல்லது ரூ. 35,000 இவற்றில் எது குறைவோ அத் தொகையை வழங்கும். மீதம் உள்ள பத்து விழுக்காடு, அந்த நிறுவனமே, மகளிர் விடுதியை ஏற்று நடத்தக்கூடிய அந்த நிறுவனமே ஏற்கிறது.

விமான தளங்களின் சுற்றுப்புறத் தூய்மை நிர்வாகக் குழு.

கு. கா வி. எண். 9—(* வினா எண். 9137) திரு. மு. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விமான தளங்களுக்கு அருகிலுள்ள சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தி விபத்தை தடுக்க சுற்றுப்புற தூய்மை நிர்வாகக் குழு Environment, Management Committee என்ற அமைப்பை அரசு ஏற்படுத்தியுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: சிவில் மற்றும் விமானப் படை விமானங்களுக்கு பறவைகளினால் ஏற்படும் ஆபத்துக்களை தவிர்க்கும் வழிவகையை ஆராயும் பொருட்டு தமிழ்நாடு அரசு 1980-ல் விமானதள சுற்றுப்புறத் தூய்மை நிர்வாகக் குழு என்ற ஒரு குழுவினை ஏற்படுத்தியுள்ளது. சுற்றுப்புறத் தூய்மைக் கட்டுப்பாட்டுத் துறையின் ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர் இதன் தலைவராவார். இக்குழுவில்

1986 மே 3]

சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களும், விமான நிலைய அதிகாரிகளும், உள்ளாட்சி மற்றும் பொது சுகாதாரத் துறை அலுவலர்களும் இடம் பெற்றுள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 625 மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் குறித்து.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயத்தை தயவுசெய்து அருள் கூர்ந்து அவையில் எழுப்ப அனுமதிக்க வேண்டும்.

மன்றத்தின் தலைவர் அவர்களே, தாங்கள் வழக்கறிஞர் என்ற முறையில் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்னைக்கு அருள்கூர்ந்து தாங்கள் அரசிடமிருந்து விளக்கத்தைப் பெற்றுத் தந்தால் மிகவும் உதவியாக இருக்கும். பொதுப் பிரச்சினை.

தங்களுக்கு மிக நன்றாகத் தெரியும் குதிரைப் பந்தய ஒழிப்பு சம்பந்தமான வழக்கு வாபஸ் பெறப்பட்டு விட்டது. 1974 ஆம் ஆண்டு முதற்கொண்டே குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் அமலுக்கு வந்திருக்கிறது. அப்படி அமலுக்கு வந்திருக்கிற நிலையில் ஊட்டியில், சென்னையில் குதிரைப் பந்தயம் நடந்தால் அது போலீஸ் சட்டத்தின்படியும் சட்ட விரோதமானது. சட்டப் படியும் சட்ட விரோதமானது. இதுவரையில் மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் அது குறித்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்ற காரணத்தால் ஒன்றும் செய்ய இயல வில்லை என்று சொல்லி வந்தார்கள். இப்போது அரசாங்கம்